<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>

<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>

<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>

**<u>MCOP No.</u>199/2019**

ம.சா. 1 தேதி.05.08.2026

| | | | |
|---|---|---|---|
| பெயர் | Dr.ராஜசேகர் | த/பெ, | ராமானுஜம் |
| வயது | 63 | தொழில் | எலும்பு முறிவு மருத்துவர், வைரம் மருத்துவமனை , மயிலாடுதுறை |
| கிராமம் | மயிலாடுதுறை | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் மயிலாடுதுறை வைரம் மருத்துவமனையில் எலும்பு முறிவு மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரப்பெற்று அதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். கடந்த 10.12.2018 ஆம் தேதி சாலை விபத்தில் ஏற்பட்ட காயத்திற்கு மயிலாடுதுறை அரசு பொது மருத்துவமனையில் முதல் சிகிச்சை பெற்று பின்பு என்னிடம் சிகிச்சைக்கு வந்தார். அவருக்கு வலது காலில் முழங்காலுக்கு கீழே இரண்டு எலும்புகள் உடைந்து இரத்தக்காயத்துடன் என்னிடம் வந்தார். 11.12.2018 அன்று அவருக்கு வலது கால் முட்டியின் கீழ் ஏற்பட்ட எலும்பு முறிவுகளுக்கு வெளியிலிருந்து கம்பி பொருத்தி Extranal Fixator என்ற முறையில் அறுவை சிகிச்சை செய்தேன். மேலும் அதே கால் பாதத்தின் மேல்பகுதியில் சதை கிழிந்து காணப்பட்டது. தோல் எடுத்து பொருத்தி அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. பின்னர் 17.12.2018 அன்று அவரை டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார். மீண்டும் புற நோயாளியாக வர அறிவுறுத்தப்பட்டது.

ரவிச்சந்திரனுக்கு வலது கால் முட்டிக்கு கீழ் ஏற்பட்ட எலும்பு முறிவு மற்றும் தசை நார்களில் சிதைவு ஏற்பட்டதனால் அந்த பகுதியில் இரத்த ஓட்டம் பாதிப்பு ஏற்படும். இரத்தம் ஓட்டம் பாதிப்பு ஏற்படுவதால் Fat embolism ஏற்பட வாய்ப்பு உள்ளது. விபத்தில் இறந்துபோன ரவிச்சந்திரனுக்கு விபத்துக்கு முன்பு எவ்வித சர்க்கரை நோயோ, எவ்வித இரத்த அழுத்தமோ இல்லை.

<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>:–

ரவிச்சந்திரனுக்கு நான் எப்போது சிகிச்சை அளித்தேன் என்றால் 10.12.2018 அன்று முதல் 17.12.2018 வரை உள்நேயாளியாக அனுமதித்து அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் மசாஆ4 நான் அளித்தது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் அவர் நல்ல நிலையில் விடுவிப்பு செய்ததாக குறிப்புகள் உள்ளது என்றால் சரிதான். அவருக்கு நான் பரிந்துரைத்து மருத்து மாத்திரைகள் டிஸ்சார்ஜ் சம்மரியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் மீண்டும் மறுபரிசோதனைக்கு வருவதும் குறிப்பிடப்பட்டுள்ளது. இறந்துபோன ரவிச்சந்திரன் எப்போது இறந்தார் என்றும், எப்படி இறந்தார் என்றும் எனக்கு தெரியாது என்றால்

சரிதான். அதனால் அவரின் இறப்பிற்கான காரணம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது முதன்மை சாட்சியத்தில் Fat embolism ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று சாட்சியம் அளித்துள்ளேன் நிலையில் அதுபோல ஏற்பட வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் ரவிச்சந்திரன் என்பவருக்கு தொடர் சிகிச்சை அளிக்கவில்லை என்றால் சரியல்ல,. நான் தொடர் சிகிச்சை அளித்தேன் அதற்கான ஆவணங்கள் அவரிடம் தான் உள்ளது. நான் மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.